306

உ

ஓம்.

சுபமஸ்து.

ஸ்ரீராமஜெயம்.

12 OCT 1923

# கீதரஸ மஞ்சரி.

என்னும்

# பக்திரசகீர்த்தனங்கள்

(முதற்பாகம்.)

இது

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலூகா
சின்னமனூர் வித்வரத்னம் மகா-ா-ா-ஸ்ரீ
G. N. வேங்கிடநரசிம்மையரவர்கள்
குமாரரும்
ஷியூர் ஸ்ரீ சரஸ்வதி சங்கீத பஜனைச் சபையின்
உபாத்தியாயருமான

C. S. தேவுநிவைய[illegible]

இயற்றப்பட்டு

குளித்தலை
"ஸ்ரீ மீனாம்பிகை பிரஸில்"
பதிப்பிக்கப்பட்டது.

1923. [அணா 4.

R2:417
N23
186190.

உ

ஸ்ரீராமஜெயம்.

# முகவுரை.

இந்நில வுலகத்தில் உதித்த நல்மக்கட்கெல்லாம், உறுதி பயக்கும் பொருள்கள் நான்கு அவையாவன:-அறம், பொருள், இன்பம், வீடு, என்பனவாம். இவைகளில், முதல் மூன்றும் சிற்றின்பத்தின்பாற்படுவனவென்றும், மற்றதொன்றுமே, பேரின்பமெனவும் நூல்கள் கூறும். "அரிது அரிது மானிடராதலரிது," என்ற, ஔவையின் அமிர்த வாக்கின்படி, மிக அருமையான மானிடஜன்மமெடுத்த நாம், பேரின்பம்பெறுவதற்கான பக்தியைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். "பக்தி இல்லாதவர்க்கு முத்தி இல்லை" என்பது பழமொழியன்றோ! பக்தி என்பது, பரமேஸ்வரனிடத்தில் பரிபூர்ணமான அன்பு செலுத்துவதாகும். இதற்கேற்ற கருவிகள், மனம், வாக்கு காயங்களே. இம்மூன்றையும், சுத்தமுறக்கொண்டு, அரன் தொண்டில் ஈடுபடுத்தினால், மாணிக்கவாசகர், ராமதாசர், முதலிய பெரியோர்களைப் போல வீடு பெறலாம். இப்பொழுது நாம் மேற்கொண்டிருக்கும் பக்தியை, இக்காலத்திற்கேற்ப, வாக்கால் நிறைவேற்றவேண்டுவது அவசியமாயிருத்தலால், பல, கனராகங்களிலும், ஜன்யராகங்களிலும், "பல்லவி" "அநுபல்லவி" "சரணம்" என்ற அங்கங்களைக் கொண்டும், அவ்வப் பாட்டுகளுக்கேற்ற தாளவரையறைகளோடும் தற்கால நூதன வர்ணமெட்டுகளில், என் சிற்றறிவிற்கெட்டியவாறு ஒரு சிறு நூலினை செய்திருக்கிறேன். இந்நூலினை, பகவத்பக்தர்கள் யாவரும் உபயோகப் படுத்தவேண்டுமென்று கருதி, இதனை அச்சியற்றத்துணிந்தேன். நான் இவ்வேலையில் தலையிட்ட பிறகு, எனக்குநேர்ந்த இன்னல்கள்பல அவற்றையெல்லாம்சகித்துக்கொண்டுஒரேநன்நோக்கத்தோடு நின்று, அப்பணியை முடிவுறுத்தும்படி செய்த, "பேரின்ப விளக்கினுக்குத் தூண்டுகோல்" போல்பவரான பெரியகுளம் மிராசுதார்களாம்; கனம் ராஜராஜ ஸ்ரீமான் P. S நாகேஸ்வரையரவர்கள், கனம் D. V. சீதாராமையரவர்கள், கனம் P. K. சென்னகேஸ்வர சாஸ்திரிகளவர்கள், சின்னமனூர் மிராசுதாரர்களான கனம் ராஜராஜ ஸ்ரீமான் C. V. வெங்குவையரவர்கள், கனம் C.V. இராமஸ்வாமி ஐயரவர்கள் முதலிய பெரியோர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகிறேன்.

இதனைத் தமிழுலகத்திற்கு உபகரிக்கவேண்டுமென்ற, நன்னோக்கமுடையவரும், மணத்தட்டை மிராசுதாரும், குளித்தலை ஸ்ரீமீனாம்பிகைஅச்சுயந்திரசாலைத்தலைவரும், எனது ஆப்த நண்பருமாகிய ஸ்ரீமான் V. N. ரெங்கசாமி ஐயரவர்கள்பால், என்றும் மறவா நன்றியுடையேனாவதோடு, இதனை வெகு விரைவில், மிக அழகாக அச்சிட்டுத்தந்த அவர்கள் உதவிக்கு என் மனப்பூர்வமான வந்தனத்தையும் செலுத்துகின்றேன்.

"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாறிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

C. S. தேவுடு.

உ

மழைசைநகர் ஸ்ரீமான் நாராயணையர் அவர்கள் குமாரரும் குளித்தலை போர்டு உயர்தர கலாசாலைத் தமிழ்ப்பண்டிதருமாகிய கனம் G. N. நரசிம்மையரவர்கள் இயற்றிய

## நேரிசை ஆசிரியப்பா.

---

பொன்மலர்தம்மிற் பொருந்தளி யினங்கள்
பொம்மென விம்மிப் பொருவில் கள்ளுண்டு
என்றுங்களித்தே இருந்திடு பொழில்சூழ்
அரிகேச புரத்துரிமை யோடமர்ந்து
அகத்தியனுரைத்த விருத்திடு புகழுறு
இன்னிசை இயலினை இனிதினில் ஆய்ந்து
பற்பல கீதம் கற்றுறவமைத்தான்
அன்னவன் யாரெனின் அறைகுதும் கேண்மோ
மதிமலிபுரிசை மாடமிகு மழசை
நன்னகராள்வோன் பின்னமில்சீரான்
அந்தணர் குலத்தினில் வந்தவதரித்தோன்
செந்தமிழ்ப்பாற்கடல் புந்திமத்தாற் கடைந்
தெடுத்தவமிர்தமாம் இலக்கண விலக்கியம்
முற்றக்கற்றவன் மூதறிவாளன்
நற்றவமுடைய நல் நரசிம்மப்பெயரான்
தவத்தினில் உதித்தவன் தன்மையின் மிகுத்தவன்
பாவமகற்றிடும் தேவுடுப்பெயரான்
ஆதவன் அதனை அச்சிற்பதித்த
உத்தமன் யாரெனில் உரைக்குதும் கேண்மின்
காவிரி இருகரைக் காவிரித்தென்கரை
ஆர்மணத்தட்டை அமர்ந்தினிதிருப்போன்
இன்னிசை வல்லான் பொன்னிசை வுள்ளோன்
அந்தணர் குலந்தனில் முந்துறவந்தோன்
சிந்தையிற் செயலினில் அந்தமிகுத்தோன்
நாராயணன் தரு வரார் புதல்வன்
எழில்பெறுமிரங்கசாமி
என்னு நாமத்திலங்கிடுவோனே.

---

186798

உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ வாக்தேவி சகாயம்.

மதுரைஜில்லா பெரியகுளம் தாலூகா

சின்னமனூர்

# தேவுடையாரால்

இயற்றப்பட்ட முதற்பாகம்

# கீதரஸ மஞ்சரி.

---

## கணபதி துதி.

### 1. ச. க. ப. ப. ம. க. ம. ரீ. என்ற மெட்டு.

முத்திக்கே யொருவிதையாய்—மூலாதாரப் பொருளாய்
சித்திக்கா ணபதமருள்—சிவகண நாதனையே
நத்திக்கும் பிடவினைகளும்—நாடாதே இடுமவனை
நாளுந்தா, னீவந்தா, னாயென்றே, தாய்நெஞ்சே
நீயங்கவ னடிதொழவே—யேதிங்கொரு மிடியுறவே
நிலமேற்றே வுடுதமிழே—நிதியெனக் கணபதியடிபணி (முத்)

## கலைமகள் துதி.

### 2. ஜெயராமா என்ற மெட்டு.

நாட்டை—ஆதி.

1. கலைவாணி—கதியருள் (கலை) கதியருள்
கவலையாவு—மிவணிலாது ஒழிவுற (கலை)
வலைவீசி—வருகிற (வலை) வருகிற
கஞ்சக்கண்ணியர்—வஞ்சிப் பொருவிடு (கலை)

2. கம்பனுதி—கலைவலர் (கம்) கலைவலர்
கண்டார் புகழதை—யுன்றன் பணிவதில் (கலை)
நம்பினேனை—நலிவது (நம்) நலிவது
கன்றல வென்று—நலந்தர வந்திடு (கலை)

1? OCT 1923

186190

3. அன்னமீது—அமர்ந்துளாய் (அன்) அமர்ந்துளாய்
அதிகப் புகழ்பெறு—மதிலையத் தருகிற (கலை)
பின்னமேது—பேசிடில் (பின்) பேசிடில்
பேணித்தேவுடு—காணும் பாட்டினில் (கலை)

## கந்தன் துதி.

### 3. திலாதியாங்கே சோடாபையா என்ற மெட்டு.

| | | | |
|---|---|---|---|
| சுடர்வடிவேலா | சூலாயுதனருள் பாலா | அசுரர்கள் காலா | |
| மறைபுகழ் | சீலா வனுகூலா | | (சுடர்) |
| நற் | சிகியமர்ந்த நாதா | கல | |
| | சுகமளிக்கொ ணாதா | | (சுடர்) |
| படமுடியாத | படியொரு கஷ்டம் | தாவுனதிஷ்டம் | |
| பதிவது கஷ்டம் | பரிந்தருளா யதிர்ஷ்டம் | | (பட) |
| என் | பக்கமேவும் வீரா | பழ | |
| | னிக்கு ளாருந் தீரா | | (சுடர்) |
| தினைப்புனமேவுக் | தோகையின் இன்பக் | தான்கொளச் சென்றம் | |
| சேமனமுங் கொண் | டேகிய பண்புந்தான் | | |
| மனத் | தேமறந்த தோதோ | க்ருபை | |
| | தேவுடுக்கு ளூதோ | | (சுடர்) |

## அம்பிகை துதி.

சஹானா-ஆதி.

### 4. ஐயா பழனிமலை வேலா என்ற மெட்டு.

1. அம்மா தாயே சிவகாமி    எனக்
கருள் புரிந்திடு வபிராமி
சும்மா கூவியுமிப்பூமி    மிசை
சுகமடைய விலையே வாமி    (அம்)

2. ஆருந் துணையிலாதோ னேனென்    உன
தனுக்ரகங் கிடைத்திடக் காணேன்
சாருந்துயருக் கிலக்கானேன்    உனைச்
சதமெனப் பணிந்திடலானேன்    (அம்)

3. இப்போதேனு மென்றன் மேலே சந்
திரங்கிடுவா யதனாலே
முப்போது மதியுமுன் பாலே பிற
மூரண்படுமோ மலை போலே (அம்)

4. ஈவி ரக்கமுனக் கிலையோ எனக்
கிது தகு கதிதரத் தொலையோ
ஆ! விதிக்கு மருந்திலையோ அதை
அகற்றுவதிற் கருத்திலையோ (அம்)

5. உன்னை நம்பினவ னன்றோ எனக்
குகந்தருள் புரிவது மென்றோ
என்னைப் புறக்கணித்தல் நன்றோ நின
பதமூறும் வழக்கெனக் கின்றோ (அம்)

6. தேருங் கவிஞர் களித்தாட இசைத்
தேனது பெருகியே நாடக்
கூறுங் தேவுபெண் பாட கரங்
கூப்பித் துதித்துனைக் கொண்டாட (அம்)

## 5. பரமன் துதி.

இராகம்—மோகனம்—தாளம்—சாப்பு.

### பல்லவி

உன் தெரிசனத்தைக் கொண்டேன் கொண்டதும் தானே
உன்னைப் பூரிக்கக் கண்டேன் (உன்)

### அநுபல்லவி

சன்னிதானத்திலின்று சந்தோஷமாக நின்று
சிவனே பரனே சங் கரனே கதி நீயென்று (உன்)

### சரணங்கள்.

1. என் மனத்துயரங்கள் எல்லா மொழிந்திடவும்
என் றுமுன் னுருவேயிங் கெனக்குள் ளிருந்திடவும்
நன்மனத் தோடுன் றன் நாமம் புகன்றிடவும்
காதா நீதா நலந் தாவெனவே நின்று (உன்)

2. மாலோடு நான்முகன் மாறில் பந்தயமிட்டு
மாமுடி யடிதேடி மண்ணும் விண்ணுமே தொட்டு
காலுடன் முடியதைக் காணமல் மனம் விட்டு
மதியே விதியே சத் கதியே யெனக்கும்பிட்ட (உன்)

3. பக்த கோடிகளெல்லாம் பரனே யெனக் கொண்டாட
பண்ணவ ரெலாம்நின்று பண்முறை யொடும்பாட
நித்ய மகோத்ஸவம் நினைத்தென் மனமும் நாட
நிமலா விமலா நிர் மலாவென்றுனை யேதேடி (உன்)

4. வேத கோஷத்தைச்செய்யும் வேதிய ரொருபுறம்
நாத கீதத்தைப்பாடும் நங்கையரொருபுறம்
நீதமாய்த்தேவுடு நவிலும்பாட் டொருபுறம்
நிதியே உனையே யெத்தியும் புகழ நிதம் (உன்)

## கண்ணன் லீலை.

### 6. மங்கையேமனந்தள்ளாடுதே என்றமெட்டு.

கண்ணனுக்கோர் தண்டனை கொடுப்பாய் அம்மணி

1. நண்ணிஇனி வாழ்தற்கில்லை நங்கையேவுன் சேயின்தொல்லை
எண்ணிச்சொலக் கூடுமோ இல்லை இல்லை இல்லை (க)

2. புத்திருக்கு நெய்யொடுபோல் வைத்திருக்கு முரியதன்மேல்
சித்தமதை நாட்டுவான் தினம் தினம் தினம் (க)

3. சின்னஞ்சிறு கன்னியரை யுன்னியவன் செய்துயரை
என்னென் றெடுத்தோதுவோம் தாயே தாயே தாயே (க)

4. ஆயர்குலப் பாலர்களை நேயம் செய்து சூதுமொழி
தீயவெண்ணங் கொள்ளவே மொழிவான் மொழிவான் மொழிவான் (க)

5. பார்ப்பவர்க்குச் சிறுவனம்மா பாரில்வெகு துஷ்டனம்மா
ஆர்க்குமடங்கா னிவனம்மா அம்மா அம்மா (க)

6. தேருங்கவித் தேன்பொழியும் தேவுடு சொற்போல் இனியும்
தேரி முடிப்பாயினி யம்மா அம்மா அம்மா (க)

## ஸ்ரீராமர் துதி.

### 7. வாடியேன் மாங்குயிலே என்ற மெட்டு.

சூரிய குலதிலகா ஜகத்ரக்ஷகா (சூரி)

கூரிய வேற்கண்ணி கோசலை தவமென்னணி
குழவியாகச் சனித்தோய் புகழ் மிகுத்தோய் (சூரி)

தந்தை சொல்லே வேத மந்திரமாமென
தரணியில் போதித்தவா தவமிகுத்த (சூரி)

வேத ரிஷிகள் துதி சாது சற்குணநிதி
நாதனே யாளாய்நிதி நலமிகுத்த (சூரி)

தசரதன் பாலனே தசமுகன் காலனே
ஸ்ரீதேவி மகிழ்சீலனே அநுகூலனே (சூரி)

நம்பிய தேவுடு கவிலிசை யுகந்திடு
நாயக மாமணியே நாளும் வந்தாளாய் (சூரி)

## மயிலவன் துதி

### 8. சிவஷண்முக என்ற மெட்டு.

அடாணா-ராகம் தாளம்—ரூபகம்.

பல்லவி.

எழியேன்முறைக் கோவிரங்காதிருப்பாய்—என
னையாமுரு, கையாவேற், கையாஅருள், செய்வாயினி (எழி)

அநுபல்லவி.

ஒளியாகி யென்னுள்ளம் உறைந்திட.
வருவாய்திருப், பரனே நின தறுமாமுகம், அறிவேனினி (எழி)

சரணங்கள்.

அன்றமரருக் கபயமளித்த ஈராறு கரத்தவனே—சம
ரந்தனில், குன்றவ், சூரரைக்கொன்று, நீருக்கி யொழித்தவனே
கன்றேனுனை நம்பித்தவிப்பது நானுன் துதித்-தாளும்படி
தாளும்பிடித் தேனிப்படி (எழி)

எங்கள்குலதெய்வ மென்றுனை யெண்ணிப்பணிவது மெய்யிலையோ
உனக்—கேற்காதவேலையோ யெண்ணித்துணிந்திடில் ஈதுலகுக்குமிலையோ
அங்காருயிர்க் காதலிமேலேயே அறவேயுள, வுறவாலெலனை,
மறவாதென, தருகேயிரு (எழி)

எத்தனைநாளிவ் வருத்தமுற்றே யிந்நிலத்தினில் வாழ்ந்திடுவேன்-என்
னத்தனையாவதுன் சித்தமென்மேலாக வைத்திடிற்றாழ் வொன்றிலேன்
எத்தாய்தந்தையுன்னை யொப்பார்கூறு இனித்தேவுடு, வுனைத்தேடிட
நினைத்தேயருள், ளினைத்தானி (எழி)

## கணபதி துதி.

### 9. அடைக்கலமே என்ற மெட்டு.

ஆபி. ஆதி.

பல்லவி.

கணபதியே குணநிதியே—எனைக்
காத்தருள்புரிந்திடக் கழலடி தொழுதேனுன் (கண)

அநுபல்லவி.

1. நிணமுமெலும்பு மொன்றாய்நிலைத்திடுந் தேகம்
நித்தியமெனநா னினைத்தது மோகம்
பணங்காசுகளிலுறும் பாவைய ராகம்
பதிந்திடுங் கருத்தாற் காணேனுன்வை போகம் (கண)

2. புவியிற்பிறந்த மானிடப்பத ரானேன்
புண்ணியம் செய்திடத் தெரியாமற் போனேன்
செவியிலுன் னாமத்தைச் சேர்த்திடத் தோணேன்
செய்வகை யாவுஞ்சாண் வயிற்றுக்கென் றானேன் (கண)

3. சாதுசங்கத்திற் சென்று சேர்ந்தது மில்லை
சற்குண சரிதையி லென்மனம் கல்லே
வாதுவழக்கதுவே வாழ்ந்திடு மெல்லை
வந்திடுமிவைகளால் மிகுந்திடும் தொல்லை (கண)

4. தேவுடு மொழிந்திடும் சீர்பெறுந் தமிழே
தெரிந்தெனையாளுவதே பெரும் புகழே
மாவடுக்கண்திரு மகள்மிக வுவமைமது
ராபுரிக்காசியின் மடியிலமர்ந்திடும் (கண)

## வாணி துதி.

### 10. கலிலோ என்ற வர்ணமெட்டு.

காபி-ஆதி

பல்லவி.

புவிமே லுனதடியிணைநதியே பூங்கொடி பாரதியே
புகழும் கல (புவி)

அநுபல்லவி.

அவிவேக மாகிய யிருளால் அழிந்திடு மெனையாளாய்
அரிய நெடும் (புவி)

சரணங்கள்.

எலாதினிமேலு மிந்தசமுசாரத்தி லாழ்ந்திடவே கவலையதென்
பாலாயிருந்தே வருத்தமனம் பதைக்குது வாழ்ந்திடவே
மேலாகியநூல்களில் நடமிடும் மேன்மைசேர் வாக்தேவி கலையினுவி (புவி)

மனதாகிய கடலினில் சஞ்சல மரக்கல மோடிடவும் உனையுமெந்தன்
மனதாரப்பணிந்திட வகையறியாது தள்ளாடிடவும்
எனதாசையெலாம் சிதைவுறவுநீ இரங்கிடத்தடையேனோ
பாவினானே (புவி)

சிறியோர்களின்மிகு பிழைபொறுப்பதும்பெரியவர்கடனன்றோ-தேவுடுவும்
வறியோ னெனவந்தகை கொடுப்பதில் வாதுமுனக்குண்டோ
அறியாமற்றவறுகள்செய்யினும், அதனைப்பொறுத்தாள்வாய்
அகமகிழ்வாய் (புவி)

### 11. கண்ணன் துதி.

இராகம்-பூரி-கல்யாணி-தாளம்-சாபு.

பல்லவி.

அம்மா எசோதா யுந்தன் அருமைக்குமாரன் செய்யும்
அநியாயஞ் சொல்லத் தரமா (அம்)

அநுபல்லவி.

சும்மாயிப்படி வந்து சுற்றிக்கொடுமை செய்தால்
எம்மா லிதைச் சகிக்க லாதாதலாலிப்போ (அம்)

### சரணங்கள்.

1. வீட்டிற்சிறு பெண்களை — வைத்தே வெளியிற்சென்று
விட்டாலுமிகத் தொல்லையே — வீட்டைப்
பூட்டிச்செல்லுவோமானால் — பூட்டையுடைத்துச்செய்யும்
போருக்கேது சொல் லெல்லையே
வாட்டிவரும் விதத்தை — வந்துனக்கே புகன்றால்
ஓட்டி விடுகிறாயெம் — மோலத்தைக் கேட்காமல் (அம்)

2. பாலோடு வெண்ணெய் தயிர் — பத்திரப்படுத்திடப்
பார்த்தாலிடமுமில்லையே — எங்கள்
பாலர்களையும் சேர்த்துப் — போதனை செய்வதையும்
பார்க்கச் சகிக்க வில்லையே
பார்த்தால் சிறுவனம்மா — பகடிசெய்குவான் சும்மா
பாரம் தெரிந்தெம்மையும் — பாதுகாக்காததேனோ (அம்)

3. செய்யுங் கொடுமைகளைச் — சொன்னாலினியே நாங்கள்
உய்யும் வகையு மில்லையே — இன்னும்
கையுங் களவுமாகக் — கட்டித்தயிர் குடிக்கும்
போது கண்டாலும் — தொல்லையே
பெய்யுந்தேன் மழையெனப் — பாடுந்தேவுடு பாட்டில்
மெய்யும் மனமுங்கொண்டு — மேட்டிமை செய்யும்போது (அம்)

## 12. கொஞ்சம் சங்கடமா என்ற மெட்டு.

நடபைரவி-ரூபகம்.

### பல்லவி.

துன்பந்தந்திடவோ — வுமைத்
தோத்திரமே செய்தே — ஞத்திரத்தோமே (துன்)

### அநுபல்லவி.

இனித் — தரங், தெரிந், துளங், கனிந்
திடுங், குணங், கொளுந், தினம் (துன்)

இதில் — தாவா, வேயோ, தாதீர்
ஆகா. வா தா, டாதீர் (துன்)

இந்தத் — தாரணிமேலென தாசையெ
லாமறவே சிந்தையாகவே (துன்

நித்தம் தோகை விரித்தங் காடிநடக்குங்
கானமயிற் கண்டோடி நடத்துந்
தோரணை நித்தம் பேணுமெனக்குத் (துன்

வும்மைத் துதியதுபுரி விதமதையறி
மதியணுவிலை கதிகொடுமினி (துன்)

எழிற் றிருப்பரங்கிரி மேவிய
துணைப் பதந்தனில் நாடியும் (துன்)

சரணங்கள்.

அன்பர்தமக்கருள் செய்யுமுதார
ரென்பதைக்கொண்டுமை நம்பிடும்வாரன்
இன்பக்குறிக்கிலக் கர்காக்குமார
னென்றுமேயும்பதம் தொண்டுசெய்நீரன்
இதிற்சிறிதும் பிசகிலையென் ஞ்ரீரோ—வெனக்
கினியாமுந்தரவென்னிடம் வாரீரோ நீரே
இக்கட்டாலழியும்படி வைக்கப்பாரதிலெப்படி
சிக்கித்தானே தவிப்பது மக்குத்தோணவுரைத்திட
லேயுமாவல. மாயமாயீது-ஞாயமா சம்ப்ர-தாயமா யினித்
தீதைவிடுந் தண்முக மொடிப்
போதேவுடுவுக் கருள்கொடும்
தினந் தினந் துதித்துமை
மனந்தனிற் பதித்தவன் (துன்)

## 13. பூரணச்சந்ரோதய என்ற மெட்டு.

நாட்டை-ரூபகம்.

பல்லவி.

சோதனைசெய்யா தெனையுங்கா சத்தாகிய நீயும் (சோ)

அநுபல்லவி.

இந்த ஜகத்திலுறு, மயக்கமது, மிகுத்திடுத, லகற்றிமிக (சோ
கொடும் சங்கடமே தருபோகம், தங்குவதாலதி சோகம் (சோ)

சரணங்கள்.

ஏதெனக்குன்னையல்லாலொருகதி—எப்போதுமுந்தன் பொற்பாதமேகதி
வாதுனக்கென்றோ வந்தென்னை யிங்கேமதி—வறுமையிற் சிறுமையுமு
டையேன்—பொருமையிற்சிறிதுமிலடியேன்—வேதனையிங்கேஜனிக்குதே
வந்தென்—சிந்தைமகிழ்ந்திட நின்றருள் (வேதனை)

உன்னைத் தினமெண்ணிப் பலநாள் கழியுது
என்னைத்துயர் நண்ணத்தகுமோ மொழியது.

ஏனோவுன் செவிவழியே-யேறுதிப்படிப்பழியே-யாருமெலன் கதியிலையே-
யாதாஞ்சொல் மறுமொழியே-ஆனைமுகத்தோ னிளையோனே நல்ல
அழகாகிய, மயிலேறிய குழகாயினி, கதியேகொடு (ஆனை)
எந்தன் ஆவற்போக்கிடவே தினம் மேவிக்கும் பிடுவேனுனை (ஆனை)
என்றும் முத்திக்கோர் வித்தெனவுல, கத்திற்று னித்ததியுறு (மானே)

தேவுடுவின் இன்பப்பாடலைச்கொண்டு-தேர்மொழி சொல்லாத தேனீயு
மின்று-மாவடுக்கண் குறமானினைக்கண்டு முந்திமணந்து மகிழ்ந்த-புந்திமினைந்
[துமலர்ந்த (ஆனை)
இப்போ முந்திமணந்து மகிழ்ந்த-சிந்தனையோ டெனைமுந்த (ஆனை)
நீயும்இனி மேலடியே னிடமே கனிவாயிருயே நடமே (ஆனை)

## 14. என்ன லாவண்யமே என்ற மெட்டு.

இராகம், அரிகாம்போதி—தாளம் ஆதி

பல்லவி.

தந்தாயித்துன்பமே—தாலத்திலே யெனக்குத் (தந்)

அநுபல்லவி.

தந்தைமொழி யேசிறந்த மந்திரமென் றறியாமல் (தந்)

சரணங்கள்.

அந்தமிருங் கல்வியை யெளிதிலே மறந்தனே
ஆவலாய்த் தூர்ப்போதனை செய்யன்பரிற் சிறந்தனே
பந்துஜனமித்திரர் பகர்மொழி துறந்தனே
உந்தன் விதம் பற்றினதோர் ஜோக்கு வெளி
வந்திடும் போதந்த நடைப்போக்கு பணம்
தந்துமே வாங்கும் வெற்றிலை பாக்கு புகழ்
சிந்திடவேணுமெனவே சாக்கு

ஆனவகைதேடி—போனவழிநாடி
ஈனரையுங்கூடி—யேதுமின்றிவாடி (தத்)

சஞ்சலப்பிணிக்குளென்னை—அஞ்சுதற்கேவைத்தனை
வஞ்சகக்கொடு மனமே —மிஞ்சியே குதித்தனை
தஞ்சமென்றுனையேநம்ப —ஈஞ்செனவும் நின்றனை
தேவுடுவகித்து வந்த தீது—அந்த
தேவருஞ் சகிப்பரோவப்போது—இரு
மேவியே பிதாமொழி தப்பாது—திருத்
தேவியே வருவா ளினிமீது
மூதுரை எப்போதும் —மேவுதலேநோது
வாதுகளாகாது —வாடுவதுமேது (தத்)

அன்னையும் பிதாவுமங்கே முன்னறி தெய்வமடா
ஔவையாங் கிழவி சொன்ன நன்னெறிப்போதமடா
ஆலயந்தொழுவதெல்லாம் ஆவதிதன்பின்னடா
அன்றவர் கொடுத்திடுஞ்சு போதம்—அப்போ
தொன்றுமேதெரிந்திடாத வாதம்—வெயில்
நின்றவரறிவார் நிழல் சீதம்—இது
கண்டுமே யுரைத்த சத்ய கீதம்
பாருலகிலே எந்நாளும்ரகுராமன்—சீரிணையேவோரின்—நேரெதுவுமாகும்.

15. தக்கப் பராங்கல்லைத்தூக்கி என்றமெட்டு.

இராகம் கல்யாணி, தாளம் ரூபகம்.

மாட்சி மிகுஞ் சிவபோகம்—எனும்
காட்சி தரும் நல்லயோகம் —நம்தம்
மீட்சிக்கிதே வழியாகும் —இந்த
சூட்சியிலே துயரேகும். 1

நீரிற்குமிழி யித்தேகம் —இதை
நித்தியமென்பதாம் மோகம் —கொண்டு
சேர்மையில் நீ கொள்ளல்சோகம்—பவம்
நேர்வதிலிவ்வுபயோகம். 2

மங்கைய ராசை பொல்லாது—அபி
மானமதில்லைக்கொணாது —முன்பு
லங்கைக்கோன் ராமத்தாற்றீது—கொண்ட
தீங்கினிச்சொல்லவொண்ணாது. 3

காமெனு மானுவத்தாலே—உன்
நலமழியு தாதலாலே —தில்லைக்
கோனினடிமலர்போலே —வுனக்
கேது துணையினிமேலே. 4

சுற்றத்தாரென்றிடும் பேரே —சுடு
காடுமட்டும் வருவாரே —பண
முற்றக்கால் சூழ்ந்திடுவாரே —இதை
முற்றுந் தெரிபவராரே. 5

தேவுடு சத்திய வாக்கு —தனைத்
தேர்ந்தறிந்தாலதேஜோக்கு—இனி
ஆவலாயீசனை நோக்கும் —படி
ஞாலத்திலே மனந்தேக்கு 6

## 16. அவதாரபுருஷன் என்ற மெட்டு.

இராகம் சங்கராபரணம், தாளம் சாபு.

பல்லவி.

முடியாதோ துரையே—முனியாது—புவிமீது—இனியோது (முடி)

அநுபல்லவி.

படிதனிலெனதொரு—மிடிதவிர்த்திட (முடி)

சரணங்கள்.

அடிக்கடி யுனக்கடைப், பிடித்துமிப்படியெனை, அலைக்களித்திடுவதோ
நீதம்—மனம்—துடிக்கத் துடிக்கத்தரும், துயரத்தைச்சகித்திடுந், தாமிலை
யெனக்கொருபோதும்—இதுபோதும்—இனிமீதும் (முடி)

நம்பிடுமொருவனை, நசித்திடக்கருதி நட், டாற்றிற்கைவிட்டகதை,
போலே,—உனை—நாளுந்துதித்துனிரு, தாளும் பிடித்தவனை, நாடி
வருத்துவதனாலே—துயர்மேலே—ஆதலாலே (முடி)

ஆதரவதைச்செய, வேருறவு தெரிய, யாருண்டதைப்புகலிப்
போதே,—இந்த—பூதலத்தினிற்கொடு, வாதனை மிகுத்ததனைப்,போலி
ருப்பவர் கிடையாதே—பிதுபோதே—விடுகூதே (முடி)

தரமறிந்தவரவர், வினையறுத்திடுவதுன், தரத்திற்கழகு மொழிவே
னே,—இனிச்—சிரம்பணிந்திடுமெனக், கிகபரசுகமதைச்சடுதியிலருள்
முருகோனே—யினிநானே—பொருக்கேனே. (முடி)

தேவகுஞ்சரிநல, மேவு குறத்தியிரு, தேவியர் மருவுஞ்சீமானே—
இசைத்—தேன்பொழிந்துனைத்துதி, தேவுடுவினிதயத்தே வளர்ந்தொ
ளிருங்கோமானே—உனை நானே—பணிந்தேனே (முடி)

17. தந்தேன் மைந்தன் யான் வந்தனம் மென்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தானி பியாக், தாளம் ஆதி.

பல்லவி.

என்ன சொல்லுவேன் துன்பமே—யெழிற்

அநுபல்லவி

கழனிகள் சூழ்திருப்—பழனியில் வாழ் குரு (என்)

சரணங்கள்.

1 மன்னிய மனப்பிணி முதிர்ந்திடலாச்சு
மதியுஞ் சிதைவுபட்டு மயங்கியே போச்சு
இந்நிலமதிற்பல ரிழிவுறும் பேச்சு.
இயம்புவதைவகிக்கத்தரமில்லையேச்சு. (என்)

2 இல்லற மதனிலும் நல்லறமன்று
எனப்புகல்வதையறிந் ததிலேயும் நின்று
அல்லற்படுவதிலு மகன்று நானென்று
அவனியில் சுகமடைவது மொழியின்று (என்)

3 தந்தை தாயாரெனக் கவனியிலிருந்தும்
தனித்து நானவஸ்தைகளதில் மிகச்சிறந்தும்
முந்தை வினைப் பயனெனிலது பொருந்தும்
முருகனென வுன தடியிணைபணிந்தும் (என்)

4 சுரர் பணிந்திடக்கொடுஞ் சூரனை வதைத்தாய்
சுருகமாகக் குறப்பாவை கைப்பிடித்தாய்
நரர்க்கருள் செயப்புகழ் நாமமும் படைத்தாய்
நம்பியவெனையும் நட்டாற்றிற் கைவிடுத்தாய் (என்)

5 சிந்தைக்குறையதனைச் சிதைவுறச்செய்தே
சிறியேனுமுன் கடைக் கண்ணருள் பெய்தே
சந்தப்பாசுரம பகர் தேவும் வுப்நமதே
சகத்தினிற் புகழுறச்செய்வினை கொய்தே. (என்)

18. வருத்துவதழகோ மன்னு மையல் மீறுதே என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தான் தோடி, தாளம்—ஆதி.

மனக்குறைதனைத் தவிர்ப்பாய் மயில்வீரனே
மனக்குறைதனைத் தவிர்ப்பாய்

1. வனக்குறப்பெண்ணைத்—தினைப்புனக்கண்ணே
வாதித்தவள் கைப் பிடித்த வடிவேலனே (மனக்)

2. தந்தைக்குப்ரணவம் —தனைப்புகல் காரணம்
தாலமர்ணிற்றழைத்த வடிவேலனே. (மனக்)

3. வீரர்கண்டோட —சூரன்விண்ணுட
வீசியவனைத்துணித்த வடிவேலனே. (மனக்)

4. வேட்கை பெண்மேலாய்—ஆட்கொளமேலாய்
வேடம் பலவாகப் பூண்டவடிவேலனே. (மனக்)

5. தேவுடு கீதம —கூவிடும்நீதம்
தேர்ந்தெனைக் கைப்பிடித்துக்கா வடிவேலனே. (மனக்)

19. ராம பஜன ஹோதியா என்ற மெட்டு.

இராகம்—தேசிக தோடி. தாளம்—ஆதி.

வேலனை நினை மனமே—வினையகல—வேலனை நினை மனமே

1. காலனையுதைத்த சீலனுக்குதித்த
பாலனைத்துதிமனமே வினையகல (வே)

2. பூதலக்காக்ஷி புகட்டிடும் மாக்ஷி
புந்தியிலெண்ணித்தினமே—வினையகல (வே)

3. மாயைக்கேயடிமை மனிதனின் பெருமை
மகிழ்விலையதிற்றினமே வினையகல (வே)

4. பொய் சொலைசூது புகைந்திடும்போது
புகழ்ச்சியுமேது தினமே வினையகல (வே)

5. மாதர்களாசை மனிதப்பிசாசை
மயக்கிடும்போது தினமே வினையகல. (வே)

6. விளக்கதில் வீழும் விட்டில்போற்றாழும்
விதத்தினைக்கண்டு தினமே வினையகல. (வே)

7. கற்பகத்தாரு கந்தனைச்சேரு
களித்திடுயினித்தினமே வினையகல (வே)

8. தேவுடு பாட்டு சேர்ந்துமே கேட்டு
தேக்குவாயருள் தினமே வினையகல. (வே)

### 20. துலங்குசெம்பொன் என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-யேகம்.

பாரதபூவிற் பலவளமதுமலி, பழனுபுரிச் சோமானே. 1
பரனேயுனைப் பணிந்தேனே—பாலித்தருளச்
சிரமே குனிந்தேனே நானே

பரிவொடு, புனமதி, லரிவையை, மருவிய (பழ) 2
பவப்பிணிக்குமே, யவுடதமது, தரும் (பழ) 3
பாரதிலு, மிசத்திலு, மளித்திடு சுகமதை (பழ) 4
பிரணவப்பொருளதை யரன்றனக்குதவிய (பழ) 5
டாவிகுரனின் ஆவியைப்போக்கிய, (பழ) 6
பந்தம, றந்துவி, ழுந்திட, வந்தருள் (பழ) 7
பதித்தமனமது, பிறிதொருவழிதனி—லுதித்திடும்படி
விடுவதற்கில்லை இனி 8
பரனேயுனைப்பணிந்தேனே—பாலித்தருளச்
சிரமே குனிந்தேனே நானே.

பலவாயுன்னிடமே தான்கூறிப்
பதமே தந்திடவே நான் கோரப்
பிகுவோ தேவுடு வின்னருகாரப்
புகலிடமதைச் சொலுவாயே தேவ
பரனே யுனைப்பணிந்தேனே—பாலித்தருளச்
சிரமே குனிந்தேனே நானே.

### 21. பங்காஹிலாஹே என்ற வர்ணமெட்டு.

மாயாப்ரபஞ்சமிதுவே மானிடரே. (மாயா)

1. ஆயாதிங் ககப்பட்டு ஓயாப்பிணிக்குட்பட்டு
மாயாதீரையோ நீர்கெட்டு மானிடரே. (மாயா)

2. வாரிட்டி றுச்சியேமார் சேருற்றிடக்காட்டுவார்
காரிகையாரைப்பாராதீர் மானிடரே. (மாயா)

3. காமப்பிணியினாலே கட்டுண்டவர்க்கோர்காலே.
காட்டுங் கிரந்தி சூலையே மானிடரே. (மாயா)

தமிழ்நாடு ஆவணக் காப்பக
186190

4. பாழும் பணமேபுவி ...ாக்குப்பெரிதாம்கெவி
சூழும் துயர் கேட்கும்செவி மானிடரே. (மாயா)

5. தேக்கிலேமேற்றண்ணீர் தேங்குதலிலேகண்டீர்
தேக்குய்வழியே நீரெண்ணீர் மானிடரே. (மாயா)

6. கண்கண்டதெய்வமாங் கந்தனுலுய்வமே
காணீரிதுவேசைவமே மானிடரே. (மாயா)

7. ஆடுமாடுகளுடன் ஆனவகையோடுந்தன்
வீடுவாசலுமே கடன் மானிடரே. (மாயா)

8. தேவுடுவுக்கருளும் தேவன்வேலனை நாளும்
தேடிடத்துயருந்தாழும் மானிடரே. (மாயா)

22. கார்த்திகா நித்ய கல்யாணு என்ற மெட்டு.

நிந்தாஸ்துதி.

இராகம்-அமீர் கல்யாணி, தாளம் சாபு.

(1) ஆண்டிவேடம் புனைந்தாயே ஆதிக்கூற்றை மறந்தாயே
பாண்டிராஜன் குமாரியே பெற்ற பாலகனே சேயே

(2) பண்டு நாரதன் சொற்போலே பார்த்துவேடுவச்சிமேலே
கொண்டமோசமதனுலே கூறுங்குறையோமென்மேலே

(3) சாதியாசாரவூனமே சார்ந்த முன்னோருக்கீனமே.
நீதியோ வுன்நிதானமே நேர்ந்ததே அவமானமே.

(4) பெற்றதாய் தந்தையைப்போயே பிச்சையெடுக்க வைத்தாயே
உற்றபெண்பாலர்மேலேயே உத்தமா இச்சைகொண்டாயே.

(5) சொல்லெல்லாம் வேசசாரமே செய்கையெல்லாமே சோரமே
அல்லும் பகலாய் ஞானமே ஆசைதீர் பெண்பிரதானமே.

(6) தேசமெல்லாம் திருநீரே தேர்ந்த வேஷக்காரன்பாரே
தேவரெல்லாம புகழ்வாரே தேடுவீர் பெண்களின்ஜோரே

(7) தேவுடு பாட்டிலுன்மோகம் தேவகுஞ்சரிக்கே யோகம்
மேவிடுமுந்தன்வைபோகம் மேதினிக்கே சுகபோகம்

23. ஆறுமுகவடிவேலவனே கலியாணமும் என்ற மெட்டு.

இராகம்-அடாணா, தாளம் ரூபகம்.

நிந்தாஸ்துதி

ஆயும்புராண வேதாகமங்களதில் ஆரும் நற்கன்னியனே—இப்போ
நீயும் நானும் பிறந்ததென்ன சகங்கண்டோம் சொல்லுவாய் புண்ணியனே

ஆலத்திலே வொதி சாலப்பெருத்தாலும் ஆகுமோ உத்தரம்போல்—அது
போலப்பிறந்த நம்மோலத்தைக் கேட்பவர் யாருண்டு சொல்லினிமேல்

உற்றுவளர்த்த பிள்ளைகளோடே மனமுற்றதாயில்லையோ—பல
கற்றுப்பயனென்ன கைதனிலோட்டையுங் கொள்ளவென்ன தொல்லையோ

முன்னவன் யானைமுகத்தவனாய் நல்லமோதகம் சாப்பிடுவான்—பின்னும்
பின்னவனோ ஆறிரண்டு முகத்துடன் பெண்களைக்கூப்பிடுவான்

தாரமோ சொல்லுந் தரத்திலேயில்லை தனமூன்றுபெற்றவளாம்—அவள்
பேரமோ நல்லபிணத்தைப் புசிப்பது பாருனக்குற்றவளாம்

பூவதிலே நவரத்தினக்கற்களுனக்குக்கிடைக்கலையோ—நீ
பூணும் பணிகளெல்லாங் கொடும் பாம்பாகப் பார்க்க வெட்கமில்லையோ

வாசத்துக்கே வெகுயோக்கியமாக வீடுநிலத்தே யில்லையோ—விசு
வாசமுடன் சுடுகாட்டினைத்தேடிய வாறென்னுளம்வல்லையோ.

அத்தர் புனுகுடன் பன்னீர் ஜவ்வாது மணிந்திடத்தான் தொல்லையோ
உந்தன்—ஆகமெல்லாம் வெந்தசாம்பலைப்பூச வகத்தில் பாதிகசலையோ

ஐங்கரனுக்கொரு பைங்கிளியை மணஞ்செய்விக்கக்காசில்லையோ—வா
துங்கனும் வேலனையாண்டியாய் விட்டிடத்தானதுமாசில்லையோ

இல்லறம் செய்வது சொல்லரிதே யிதையெங்கறிந்தாய் மொழிவாய்—இதைச்
சொல்லவரும்போது மெல்லத்தேவுடு விதயத்திலே புகுவாய்.

24 புதியகாவடிசிந்துமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம் ஆதி.

1 கல்லோ வுனது மனம்—சொல்லாயெனக்கே முனம்
சத்தியருத்தமிகுத்து நிலத்தே வாழவோ—வுன்னை
நத்திபகத்து நினைத்து நினைத்தே தாழவோ.

2. எட்டாக் கொம்புக் கனிக்கே—கொட்டாவி விட்டிடுவார்
குட்டையெட்டி யெனிட்டமு மாகுமோ வேலனே—பலன்
கிட்டியே சட்டென மட்டற நீடுமோ சீலனே

3 எப்போதுமே யுன் துதி—தப்பாது பாரென்மதி
எங்கும் நிறைந்து விளங்கிய மாமயில் வீரனே—அருள்
தங்கமலர்ந்த முகங்கொடு பாரெனை தீரனே.

4. கண்டே துதிக்குமன்பர்க்—குண்டே மதிக்குமருள்
கற்பகத்தாதடி நிற்பலர்கேது விசாரமே—அந்த
அற்புதத்தே மனம் பற்பல வாகுது சாரமே.

5, சிந்தாகுலந் தீர்த்தெனை—வந்தாதரிப்பாயெனில்
சிந்தைமகிழ்ந்துமே வந்திடுவேனுன் செந்தூரே—கதி
தந்தவனென்று புகழ்ந்திடுவே னெனையும் பாரே,

6. தெய்வானை வள்ளிமகிழ்—செய்வோனே வுன்னைப்புகழ்
தரமதறிந்திலேன் தந்திடுவாயிரு பாதமே—இரு
கரமது கூப்பியே சொல்லுமேவன் தேவுடு கீதமே,

## 25. சூரகுலசம்ஹார என்ற மெட்டு.

1. சூலதர னருள் பாலா—கொடும்—சூரர்குலகாலா
சுகமே—தருவாய்—சீலா. (சூல)
சுரர் பணிந்திட முனி—வரர் மகிழ் வேலா
சுகமே—தருவாய்—சீலா (சூல)

2. பாரிலுனைவிடவேறு—துணை—யாருண்டதைக்கூறு
பரனே—வரமே—தருவாய் (பாரி)
பிரணவப்பொருளதை—அரன் றனக்குதவிய
பரனே—வரமே தருவாய் (சூல)

3. நாளுமுனைத்துதித்தேனே—கதி—நாடி மதித்தேனே
நலிவே—சரவோ—கோனே (நாளு)
நலமளித்திடமனப்—பலமிகுத் [illegible]
நலிவே—சரவோ—கோனே (சூல)

4. தேவுடுவினிசைப்பாட்டே—மி[illegible]—சேர்ந்துமனத்தக்கேட்டே
தமையனிடமே—வருவாய் (தேவு)
தகமிகுத்திடு திருத்—தணிகையில் [illegible]
தமையனிடமே—வருவாய் (சூல)

26. மரிவேரதிக்கேவரைய என்ற மெட்டு.

இராகம்-ஷண்முகப்ரியா, தாளம் ஆதி.

பல்லவி.

வரமேதரத் தருணமிதுவே வாடி வாடியே நான்
வருந்த வசமா. (வர)

அநுபல்லவி.

அரனார் குமாரா—ஆளாதிப்போரா
அடியேனுக்காரா—தரவோது நேராய் (வர)

சரணங்கள்.

பக்தியாகவுன்னைப்—பற்றிப்பாடுமுறை
பாரிங்கறியேன்—புவியில்வறியேன்
சக்தியோகதும் ஸ்ரீ செந்திலாருமாரா
சந்ததம் தேவுடு—வுக்கருள் செய்தீரா. (வர)

27. அடியே எந்தன் நாதன் உனக்கென்ன சொந்தம் என்ற மெட்டு.

இராகம்-தேசிக மால்கோஸ், தாளம்-சாபு.

1. துரையே யிந்தமோடி செய்வதழகாமோ (து)
வரைமேவுசேசேயே—வரமருள்வாயே
வருத்தமுரைக்கு முன் நீ அறிவாயே (து)
2. அரக்கர்தம் ஆவி—இழக்கவுமேவி
அமரர்க்கபயமளித்தோனே கூவி (து)
3. பிரமனைச்சிறையே—புகுத்திய இறையே
தருமமுனக்கிதல்ல கேட்பாய் குறையே. (து)
4 தேவுடுகீதம்—தான் சொல்லும் போதம்
தேர்ந்தஸதைக்கேட்டெனையாள்வதே நீதம் (து)

28. கபாலி பாலா என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தான் தோடி, தாளம்-யேகம்.

1 நஞ்சுண்டபூமா எந்த நாளும் வாதாமா (நஞ்)
தஞ்சமுன்னைக் கொண்டேமிந்த சஞ்சலமாமா

வஞ்சமாம்ப்ர பஞ்சமாயை மிஞ்சலாமா—முறை
வீணிற் போமோ. (நஞ்)

2. தகாதவாது—உன் த—னயன்மீது
அகாதமாங் கவலையெனுமாழிக்குள்ளேது.
விகாதமாகவே யமுந்தச்செய்யுந்தோது—உதவாதிப்போது

3. படாதபாடு—பட்ட—பாவிக்கிடு
அடாதனைச் சொல்லவுமாகாக் காணுதிவ்வேடு
விடாதெனைக் கைப்பற்றிக்காக்கவேணும் ஓடு
கொண்டோய்—என்னைநாடு (நஞ்)

4. தேவுடுகீதம்—சொல்லும்—தேரும் சுபோதம்
மேவிடாதவரெனன் மன்றுள்ளாடுமோர் நீதம்
கூவியுங்கேட்காதவகையோ யென்மீதும்
குற்றம்—தள்ளெப்போதும் (நஞ்)

## 29. கோந்தாரம் பூங்கணையால் என்ற மெட்டு.

1. ஏரகமேவிபவா வினை தீர்த்தாளவா
பாரகமீது—வேறிடமோது—தாரகமெனுக்தோது
கிடையாது—புவிமீது—விடுகுது—இந்தத்
தாரணிபுகழ்தீரா—அன்ன—பூரணிமகிழ்வீரா
இனியோர்கணமே சகியேன்—எனையாதாவே புரிவாய்
ஏலாதிது—போலாய்த்துயர்—மேலாயுற—வேலாதிரு (வே)

2. காவிற்பெண்மானை—மேவியகோனே
கடவுளருள்குமரா, அதிதீரா—மயில்வீரா—சுகுமாரா—நல்ல
தேவுடுவுக்குதாரா, மொழி, பாவினுக்குமாதாரா
திருமால் மருகாவரமே—தருவாயினிமேல் நிதமே
துதியே செயு, மடியேனையு, மதியேகதி, யிலையேதிரு (வே)

## 30. அம்பிகா வுன் மகன் குகன் என்றமெட்டு.

இராகம்—தேசிகதோடி, அடதாளம்.

பந்தபாசத்தினல் மனம்—நொந்து நான் உற்றனன் தினம் (பல்)

மந்தகாசத்துடனே—மாமயில் ஆரும்கோனே
இந்த நாள் வந்தென்முனே—ஏதந்தீர்த்தெப்போதுங்காத்திடாய் (ப

2 தந்தைதாய்குரு தெய்வமே—தாரணியிலேதினமே
எந்தனுக்காரினிமேல்—ஏதுவாதகாது நாளுமே (ப)

3 பண்டுமாங்கனிபெறவே—பார்வலம்வந்தகோவே
தொண்டுநான்செய்திடவே—கண்டு சிந்தைகொண்டுவந்திடாய் (ப)

4 தேவுடு சொல்லுங்கீதம் —தேர்ந்துமேகேளெப்போதும்
சேவையே தந்தெப்போதும்-செகத்திற், சுகத்தைப் புகுத்துவாய் நிதம் ()

## 34. என்ன லாவண்யமே என்ற மெட்டு.

இராகம்—அரிகாம்போதி—தாளம்—ஆதி.

பல்லவி.

சொன்னலானந்தமே—சீரார் சுருளி மாக்ஷி (சொன்)

அநுபல்லவி.

எந்நாளுமே மறக்க—வுன்னலாகாதேயதைச் (சொன்)

சரணங்கள்.

1 சண்பகம் அசோகு புன்னை—சார்ந்த விண்ணின் சீர்த்தியே
சாரமாக்கிளைக்குக்கிளை—சாடும் மந்தி நேர்த்தியே
பண்முறை பிசகிடாமல்—பாடும் வண்டின் கீர்த்தியே.
பார்க்கத் தெவிட்டாத நல்ல சோங்கு—அடிப்
பாகம் தெரியா அருவிப் பாங்கு—முனி
வோர்க்குத்தவம் சித்தித்திடும் போங்கு—முனை
வோர்க்குக்கிடைக்கும் பச்சிலையாங்கு
வானிலிணைப்போலும்—வரிசை யொருக்காலும்
தானிலையப்பாலும்—தரிசனமேசாலும் (சொ)

2 வேதரிஷிமார்களிதில் வாசஞ்செய் விசேஷமே
வேட்கையாகச் சித்தர்கள் வதியும் சந்தோஷமே
வேண்டியே விண்ணுறை மாதர்வந்து செய்யுங் கோஷமே
வேளைதோறுங் கந்திருவர் நாடி—நல்ல
வீணை தம்பூர் சுருதியிற் கூடி—பாடுங்
காலையிற்பவம்பறக்கும் ஓடி—இதைக்
காணக்கண்கள் வேணுமொருகோடி
காட்டும் நல்லநன்மை—காணலாமத்தன்மை
காட்டும் மோனவன்மை—நாடாதினித்தீமை. (சொ)

3 பூதநாராயணன்கோவிற்பக்கம் நல்ல மாகூஷியே
பூமணக்கும் சோலைக்கிடைபோகும் ஆற்றின் காகூஷியே
பூலோகக் கைலாசமாய்ப் பொருந்துங்குகைச் சூகூஷியே
போதெல்லாம் காவ்டியாரின் கூட்டம்—அவர்
பாடுங்குமான் துதி யெதேஷ்டம்—இரு
காதெல்லாம் செவிடுபட நாட்டம்—கொளும்
காரண வர்த்தக்கச் சங்கத்தேட்டம்
காணத்தமிழ்கூட்டும்—தேவுடுவின்பாட்டும்
கூறத்துயரோட்டும்—கோதிற் சுகங்காட்டும் (சொ)

35. ஹமாரேநபி ஆஜிதுலாபனே என்ற மெட்டு.

இராகம்-ப்யாக் தாளம்-ஆதி.

பல்லவி.

பராபரமே—உந்தன்—பாதம் அடைக்கலமே (பரா)

அநுபல்லவி.

பாதம் அடைக்கலமே—ஏதம் தீர்ப்பாயினிமேல் (பரா)

சரணங்கள்.

1 பந்து ஜனமித்திரர்—பகரும் தாய்தந்தையெலாம்
உந்தனையன்றி எனக்—குற்றவருண்டோ சொல்லாய் (பரா)

2 நம்பிய அன்பருள்ளம்—நாடியருள்புரியும்
நாதநீயே யென்றிந்த—நானிலம் புகழ்கின்ற (பரா)

3 பாழும் சம்சாரக்கடல்—பட்டுத்தவிக்கும்போது
பார்த்துந்தன்கை கொடுத்தே—பாலனைக்காரடுத்தே (பரா)

4 தொண்டன்தேவுடுதொல்லை—கண்டெங்கந்தைரியச்சொல்லை
விண்டும்அருள்புரிய—வேண்டாமோ நாடறிய. (பரா)

36. கௌனமிலே என்ற மெட்டு.

இராகம் செஞ்சுருட்டி, தாளம் ஆதி.

1 கதி எனக்கிங்காரு கூறு ஆருமுகவேலா.
ஆருமுகவேலா—அன்பனையுமாளாய்
அடியேனுந்தனைத்தொண்டு—அனுதினமும் செய்திடக்கண்டு—மிக
அவதியெனைவிவேதும் அழகாமோ எதைக்கொண்டு (கதி)

2 துதிசெய்வி தமதறிந்திடாத தமியேன் மொழிவேனே
தமியேன் மொழிவேனே—தருவாய் சுகந்தானே
தரணிபுகழ் சீமானே—நம்பும்—தனயனுக்கருள்வோனே—நல்ல
தவமிலகிய தணிகாசலத் தருவாகிய கோனே (கதி)

3 படிதனிற் கொடுமிடி தவிர்த்திடப் பகையோ யெந்தன்கோனே
பகையோ யெந்தன்கோனே—பார்த்தாள் சீமானே
பக்தன்தேவுடுதானே—சொல்லும்—பாசுரமிசைத்தேனே —இனிப்
பரந்த புவியிற், சிறந்திலகிடப், பாராய் மொழிந்தேனே. (கதி)

### 37. செந்தாழம்பூவுந் தேன்கமழும் என்ற மெட்டு.

இராகம்-தேசிகமாங்கு, தாளம் யேகம்.

கந்தா உன் தாளந்தோ நம்பியுங் கதியிலாமற் போகவோ (கந்)
சிந்தாகுலமிகுத்து—நொந்தே னறிவிழந்து
சிரிததுப்பற்பலர்—குறித்த சொற்படச்
சகித்துப் பொற்பதம்—வகித்து முற்பட (கந்)

அன்றோ இன்றோ யென்றோதுவாய்
அடியேன் உந்தனை அடைந்ததே (அன்)

நன்றோ பராமுகமே—நாளும் பராபரமே
நாட்டுந்தேவுடு—பாட்டைக்கேட்டு
நாளும்நற்கதி—வழியைக்காட்டு (கந்)

### 38. மாயமான வாழ்வை நம்பி என்ற மெட்டு.

1 ந்யாயமானபேருக்கேது நாளும் இன்பமானதோது
த்யானமே செய்தாலும்வாது தானித்தாரணியின்மீது (ந்யா)

2 பொய் புரட்டு சூதுசெய்யும் பேர்களுக்கே காலமுய்யும்
மெய்புகலும் மானிடர்க்கு மேன்மைகெட்டுச்சீரழியும் (ந்யா)

3 சோதனையீதென்று சொல்வார், சோர்வதுவீணென்று நிற்பார்
போதனைசெய்வாருதவி பார்த்துமேசெய்வாரோ நீ பார் (ந்யா)

4 பேசுமொழிவேதசாரம் போதெல்லாம்செய்வாரே சோரம்
காசுவழியானபேரம் கண்டிருப்பதோ அபாரம் (ந்யா)

5 துட்டிருந்தாற் சுற்றம் சூழும் கெட்டிடும்போதாருநாளும்
வட்டிச்சோற்றுக்காகப்பாழும் வஞ்சமாம் சேதியே நீளும் (ந்யா)

பூர்வஜன்மலாபமென்று பூர்த்தியாயெண்ணியே நின்று
ஆர்வமுற்றழிவில்லோனை ஆலத்தே துதித்தல் நன்று (ஞ்யா)

தேவுடுசொல் தேர்ந்துகேட்டு தேவனைப்பணிவோர் மாட்டு
மேவுந் துயர் நீயுங்காட்டு மேன்மையாம்வழியைக்கூட்டு (ஞ்யா)

### 39. வேலா நீ தேதியே என்ற மெட்டு.

இராகம்-கல்யாணி, தாளம் ரூபகம்.

ஏசாதோ புவியே—எழிலார் செந்தூர் கந்தா அந்தோயினி (ஏ)

ஆசைபேசி மோகமூட்டி—ஆரணங்கி னூரைக்காட்டி
பாசமாங்கடற்குள்வீட்டி—ப்போன—முனி—வோனை—கூட்டி (ஏ)

சொல்லுவாரின்பேச்சைக்கேட்டு—சோருவாரைப்போலுன்மாட்டு
இல்லையே யென்பதைக் காட்டு, ஏது, சூது, காதிப்போது (ஏ)

நாரதன் நவின்ற சொல்லை—நாடியே புனத்தினெல்லை
சேரவுங்குறத்தி தொல்லை—மீறி—தாரு—மாரு பாரு (ஏ)

பெண்ணினாசையாலநேக—பேதமானவேஷமாக
எண்ணியே முடித்த மோகப்—பேச்சு, மேச்சென், ரூச்சு, இப்போ (ஏ)

குலத்துக்கீனமான மார்க்கம் கூட்டியே வைத்தவுன் தீர்க்கம்
குறத்தியைக்கொண்டதுன்மார்க்கம்—கூடியீசன்—நாடி—வாடிட (ஏ)

தேவுடு சொல்பாட்டைப்பாடி—தேவியாம் வள்ளியைக்கூடி
மேவுமுந்தன் காக்ஷிதேடி—மேன்மை—யேகும்—பான்மையாகவே (ஏ)

### 40. ஸ்ரீராம பாதமா என்ற மெட்டு.

பல்லவி.

கோபாலபாலனே—கோகுலசீலனே கோவத்ஸானுகூலனே (கோ)

அநுபல்லவி.

பாபாஹிதனே—பரமதயாளனே—பாடிநார, தாதியர், கொண்டாடித்
தேடும் நீதனே. (கோ)

சரணங்கள்.

1 கோபாங்கனைகள்—கூடிய முனையில்—கோலாகல ஜலக்—ரீடையு
மாடையில்—கோபாவேசம்—கொள்ளவே ஆடைகள்—கோறித்
தேடி—வாரியோடி—யேறிப்புன்னை—நின்றவா (கோ)

2 நாலாமறைநீ—நாடுமிறையுநீ—நாவாற்றுதிப்பவர்—நலம்பெறு
துரைநீ—எலாதினியே—இரங்கிடுவாயே—ஏதந்தீர்த்துத்
தேவுடு சொல்—கீதம் பார்த்துக்—காத்திடாய் (கோ

41. பாலாபிஷேகப் பழனிமலையப்பன் என்ற மெட்டு.

இராகம்-ப்யாக், தாளம் சாபு.

சீராரு மோனச் சுருளிமலைக் கந்தன் சேவையிற்ஜன்ம விமோசனமே
ஈரேழு லோகாதி யோராலுமேபோற்று மின்பத்திலார்ந்த ஸிம்மாஸனமே
பாராத பேருக்கங்கே தினமே—பவப்
போரே விளைந்திடும்பார் மூணமே
சோராத யோகமும் சித்திக்குமே—அதைச்
சேர்ந்திடத்தான் மனம் தித்திக்குமே. (சீரா)

(தொகையறா)

தீராத வாரூன நோயேகுமே
நேரான சுக்ஞானமே யாகுமே.

(பாட்டு.)

தாணியிலவனொரு தரிசனபாக்யம்
தவமதிலுறக் கிடைத்திடு மெனும் யோக்யம்
தாலத்திலே யிதுபோலத் தெய்வம்—இல்லை
காலத்திலே துதிசாலச் செய்வம். (சீரா)

2 கர்வடி தோளி லெடுத்திடுவோம்—அரு
ளேவடியாக அடுத்திடுவோம்
மாவடி வாழி படித்திடுவோம்—அவன்
சேவடிக்காகக் கொடுத்திடுவோம்.

(தொகையறா)

தேவாதி தேவா யென்றே கூறுவோம்
தேவார மேயோதியே தேறுவோம்

(பாட்டு.)

தேவர்துதி செயும் தேவனை நாடித்
தே[illegible] சுகத்தினி லிருப்பவர் கோடி
தே[illegible]ஞுபதி யானபுமானடி
தேடி[illegible]ஞற் கதிதோணும் கோடி. (சீரா)

## 42. வனஜாக்ஷி என்ற மெட்டு.

இராகம்-பியாக், தாளம் ஆதி.

வடிவேலா—வினையறுத்திடும் சேவர்—கொடிவேலா
வாவைபெற்று மயின்—மேலுமுற்றதிரு (வடி)

வாடிநின் நபயிர்—தேடிநிற்குமழை—யோடிவந்ததெண-நாடிவந்ததிரு ()
வக்கணைச் சொல் மிக, வழுத்தியே புனமிசை
தக்கதைக் கணையால், தழுவினாய் தெரிவைவயை (வடி)

வட்டங் கொண்டும் பெண்ணைப் புணரவே
சட்டம் விண்டும் யெண்ணந தவறிட
இட்டம் கண்டாய் அண்ணன் வருகவே. (வடி)

ஓது பேசு சூதினாலும்—வேடபேதமாகிநின்ற (வடி)

வம்புச் சொல்லால், தேன் தினைமாவும்
பம்பித்தின்றே, பழஞ்சுனையடைந்தனை (வடி)

வளமருவிய திருப்—பழனியிலமர்சிவப்
பழமுனதடியிணை—பணிபவர்க்கருள்செயும் (வடி)

வெட்டிவேர் மருச்—கொழுந்து சம்பங்கி
கட்டித்தாரிலங்—கிடபுயந்தங்கி
மட்டிலாததிரு—நீருந்துலங்கி
மயில்மீதே—ஒயிலாக—வருவாயே—விரைவாக (வடி)

தேவயானையொடு—வள்ளியுமிருபால்
மேவவேயெனக்—சார்த்திட வருவாய்
தேவசேனையதின்—அதிபதிமகிழ்வாய்
தேவுடு—மொழிந்திடும்—தேரிசை—புகழ்ந்திடு (வடி)

## 43. பத்தோன்பதாம் நூற்றுக்குமேல் என்ற சண்டைப்பாட்டின் மெட்டு.

1. கோயிலதுதாழ்ந்திடவே ○ குடிகளங்கேதாழுமென்று
கூறும் பழஞ் சொல்லைப்போல மீறுதேகெடுதியின்று
வாயிலதில் வந்து நிற்கும் வழியாச்சே
வாதைப்படக்காலம் வெட்டும் குழியாச்சே

| | | |
|---|---|---|
| 2. | மோட்சவழிதேடிப்போகும் | மேன்மையானபாதை போச்சு |
| | சூட்சியாகத் தடைசெய்திட | சூழ்ந்த காப்பிக்கடையுமாச்சு |
| | மாட்சியாகயாருமிதை | வாங்கலாச்சு |
| | மகிமையுள்ள ஜாதிமதம் | நீங்கலாச்சு |
| 3. | காப்பியென்றாற் பிணமும்வாயை | க்காட்டியே திறக்கலாச்சு |
| | கழுவாதஎச்சிற்பாண்டம் | கையெடுத்துக் குடிக்கலாச்சு |
| | குழந்தை முதல் வ்ருத்தருமே | எடுக்கலாச்சு |
| | கூடும் பலரோகத்தினால் | நடிக்கலாச்சு |
| 4. | ஆங்கிலேயர் போக்கதிலே | ஆனதலை மொட்டையாச்சு |
| | ஆகா கா! சட்டையும்பார் | அங்கே பலபேதமாச்சு |
| | ஆவலாக லெம்னட் சோடா | நெட்டலாச்சு |
| | ஆரையும் ஸார் மிஸ்டரெனக் | கிட்டலாச்சு |
| 5. | பீடிசஞ்சா அபின் சுருட்டு | பீருடனொயின்சாராயம் |
| | பீடையான கள்ளுகாப்பி | டீயுடன்கோக்கோபூராயும் |
| | பூமியதிலே யுலவும் | கோலமாச்சு |
| | சாமியுள்ள சோயிர்சாற்றுங் | காலமாச்சு |
| 6. | அம்மையுடன் இன்டளுயின்ஸா | ஆனட்ளேக் வைசூரியும் |
| | நம்மைமக்கொண்டுமதுகள்பசி | நாடியேதணித்திடவும் |
| | செம்மையுடன்வந்துமிப்போ | சேரலாச்சு |
| | சொல்லும்வேதசாஸ்திரமே | மீறலாச்சு |
| 7. | தேர்ச்சியுள்ள நமதுநாட்டில் | தேவர்முனிவர் பொய் யென்றாச்சு |
| | தேவுடுஇதைச்சொல்லவே | மேவுங்காலமோயென்றாச்சு |
| | தேடுவோமேஇனியேனும் | நல்லவழி |
| | தேறுவோமே வேண்டாம் நமக் | கிந்தப்பழி |

## 44. ஆனந்தக்களிப்பு

1. பண்டாரமென்று நம்பாதே—பெண்ணைக்
கண்டாலுடனேதான் கொண்டோடிப்போவான்
ரெண்டு பெண்டாட்டியின் நேசம்—அதை
விண்டு விட்டால் வருமே கோபாவேசம் (பண்)

2. வாசனையேதுக்கிப்போது—இவன்
பூசும் வெண்ணீறெல்லாம் புனுகு ஜவ்வாது
பூசனை செய்திடும்போது—நல்ல
பூத்தமுறுவலாய் நிற்பதுமேது (பண்)

3. குண்டுணி நாதன் நேசம்—இவன்
கொண்ட காரணமோ பெண்களின் பாசம்
கண்டபெண்களின் சகவாசம்—இன்னம்
கவனிப்பதில்லையவர் குலதோஷம் (பண்)

4. முந்திப் பிறந்தவன் போலே—பெற்ற
தந்தையானாலுமே தான்குருபோலே
வந்துபதேசிப்பான் மேலே—இவன்
வம்பைச் சொல்ல நாவும் போதாதிக்காலே (பண்)

5. அன்பர்கலிதனைத்தீர்ப்பான்—பக்கம்
ஆர்ந்து மிடியணுகாமலேகாப்பான்
வன்பகையாளியானாலும்—அவன்
வருத்த மறிந்து வரந்தரப்பார்ப்பான் (பண்)

6. தேவுடு சொல்லுக்குதாரன்—வள்ளி
தெய்வானை தேவியர்க்கே நல்ல மாரன்
மேவும் பார்வதி குமாரன்—தவ
மேவும் பழனியிலார்ந்திடுந் தீரன் (பண்)

## 45. டில்லிநகர்தனிலே என்ற மெட்டு.

1. சொல்லி மனத்தணிக்கச் சோருதிங்கே நெஞ்சகமே
புல்லி வரமளிக்கப் பூதலத்தே வஞ்சகமோ
மெல்லி மீனாக்ஷி பெற்ற ஒயிலழகா
புள்ளித் தோகை விரித்த மயிலழகா

2. அல்லும் பகலாயுன்னை அடியேன் துதிசெய் வகைபோ
சொல்லும்பராபரமே சிறுவனெந்தன் மேற்பகையோ
நில்லும் நிமிஷமுந்தான் நான் சகியேன்
கல்லும் கரையுந்துயர் தான் வகியேன்

3. முன்னம் அமரருக்காய் மூரல் கொண்டு சூரனையே
பின்னம் அடைந்திடவே பேணிக்கொன்ற வீரனீயே
இன்னம் என்மேல் கிருபை யேனில்லையோ
எண்ணங் கொள்ளாத படியாம் மலையோ.

4. செந்நெற்கதிர் முதிர்ந்து சாய்ந்த சீரிலே திகழ்ந்து
கன்னற்கணை தெரித்துக்காட்டலான ஜோர்மிகுந்து

அன்னம் உலாவிய நற் பழனிமலை
தன்னிலிருப்பவனே மனமேனிலை.

5. தெய்வானை வள்ளியுடன்—உய்வோனே உன்னைத்துதி
செய்வானுந் தேவுமைச் சேர்ந்துமேயுன் தண்ணருளைப்
பெய்வாய் மழையெனவே பூதலத்தே
கொய்வாய் என் தீ வினையை நீமிகுந்தே.

மங்களம்—சுருட்டி—சாபு.

1. மங்களம் மங்களம்—ஜெய சுப
மங்களம் மங்களம் (மங்)

மங்களம் மதுகர வேணிக்கும் வாணிக்கும்
மங்களம் மரகத மயிலுக்கும் வேலுக்கும்
மங்களம் சங்கர னுருக்கும் மாலுக்கும்
மங்களம் ஐங்கரனுக்கும்வேலனுக்கும் (மங்)

2. மங்களம் வான்பொழி மாமழைக்கும் நல்ல
மங்களம் நாநிலத் தாருயிர்களுக்கும்
மங்களம் தேவுடு மாசில்லாப் பாடற்கும்
மங்களம் பொங்கியே தங்குக எங்கணும் (மங்)

மங்கள வாழ்த்து.

ஜோர் தூர என்ற மெட்டு.

1. ஜேய் ஜேய் என்றே யெல்லோரும்
சேர்ந்து கோஷம் செய்குவோம் (ஜேய்)

2. மாயனார் மருகனான
மாமயிலின் வீரனுக்கு (ஜேய்)

3. தும்பி மா முகத்தானுக்கும்
அம்பிகை மீனாக்ஷித்தாய்க்கும் (ஜேய்)

4. தில்லைவாழுமீசனுக்கும்
திருத்துளாயணிந்தோனுக்கும் (ஜேய்)

5. கீத ஞான போதம் நல்கும்
கமல வாணி பதமலர்க்கும் (ஜேய்)

6. வானுறும் மழை தனக்கும்
வையகத்து யிர்களுக்கும் (ஜேய்)

7. தொண் [illegible] சொல்லும்
த [illegible] க்கும் (ஜேய்)

186190 186190 1x
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

